[2013 மார்ச் 25

திரு. கே. உலகநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எரிவாயுக் குழாய்கள் பதிக்கும் திட்டத்தினை உடனடியாக நிறுத்தி, அவற்றை நெடுஞ்சாலைகளின் ஓரமாகப் பதிக்க உத்தரவிட்டிருக்கின்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், என்றைக்குமே தமிழக விவசாயிகளின் நலனில் அக்கறையோடு இருப்பார்கள் என்று மீண்டும், மீண்டும் தெரிவித்து, (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலும், தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் சார்பிலும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். நன்றி, வணக்கம்.

4. அறிக்கை அளித்தல்

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள் மீதான அவை உரிமைக் குழுவின் அறிக்கை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவை உரிமைக் குழுவின் அறிக்கையை அளித்தல். மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன், அவை உரிமைக் குழுவின் தலைவர் அவர்கள்.

மாண்புமிகு திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன் (பேரவைத் துணைத் தலைவர்): மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றப் பேரவை உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்களை தேசிய முற்போக்கு திராவிட கழகக் கட்சியினைச் சேர்ந்த சில சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் 8–2–2013 அன்று பேரவையில் தாக்கியது தொடர்பான அவை உரிமை மீறல் பிரச்சினை குறித்த அறிக்கையினை குழுவின் சார்பில் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அரசினர் தீர்மானம்

தேசிய முற்போக்கு திராவிட கழக உறுப்பினர்கள்மீதான உரிமை மீறல் பிரச்சினையில் அவை உரிமைக் குழு அளித்த பரிந்துரைகளை ஏற்றுக்கொள்ளுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசினர் தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.